www.freetnbooks.com

Dr. A. Vennila, Principal, Mydeen Matric. Hr. Sec. School
Kumbakonam - Thanjavur (D.T) (10.12.25)

# அரையாண்டுப் பொதுத் தேர்வு -- டிசம்பர் -2025

**11 - ஆம் வகுப்பு** **பொதுத் தமிழ்**

கால அளவு :3 மணி நேரம். மொத்த மதிப்பெண்கள் : 90

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14×1=14

1. "தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை வேரில்லாத மரம் கூடில்லாத பறவை" — என்றவர் யார்?
   அ) பாப்லோ நெருடா ஆ) ரசூல் தம்சதோவ் இ) வால்ட் விட்மன் ஈ) மல்லார்மே
2. துன்பப்படுபவர்________
   அ) நாவைக் காக்காதவர் ஆ) தீக்காயம் பட்டவர் இ) தீயினால் சுட்டவர்
   ஈ) பொருளைக் காக்காதவர்
3. தமிழின் முதல் பா வடிவ நாடக நூல் ________
   அ) சீறாப்புராணம் ஆ) மனோன்மணியம் இ) புரட்சிக்கவி ஈ)காவடிச்சிந்து
4. பிள்ளைக்கூடம் - கவிதை இடம் பெற்றுள்ள நூல்.
   அ) வடக்கு வீதி ஆ கொடி விளக்கு இ) தகப்பன் கொடி ஈ) சுட்டு விரல்
5. சேர மன்னர்கள்பதின்மரின் சிறப்புகளை எடுத்தியம்பும் பாடாண் திணையில் அமைந்த தொகை நூல்________
   அ) பதிற்றுப்பத்து ஆ) அகநானூறு இ) புறநானூறு ஈ) குறுந்தொகை
6. மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க
   அ) அன்னம், கிண்ணம். ஆ)டமாரம், இங்ஙனம். இ) ரூபாய், லட்சாதிபதி.
   ஈ) றெக்கை, அங்ஙனம்.
7. கூற்று—கோடு என்பது தமிழ்ச் சொல்லாகும்
   விளக்கம் — கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.
   அ) கூற்று சரி, விளக்கம் தவறு. ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி.
   இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ)கூற்றும் தவறு விளக்கமும் தவறு
8. திரவ நிலையில் நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைந்து விடுகிறது - இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.
   அ) மொழி என்பது திட திரவ நிலையில் இருக்கும்,
   ஆ) பேச்சு மொழி,எழுத்து மொழியைத் திட, திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை,
   இ) எழுத்து மொழியைவிட பேச்சு மொழி எளிமையானது.
   ஈ ) பேச்சு மொழியைக் காட்டிலும் எழுத்து மொழி வலிமையானது.
9. கருப்பட்டி பனங்கற்கண்டு போன்றவை ________
   அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப் பொருள்கள்.
   1. அ மட்டும் சரி 2) ஆ மட்டும் சரி 3) இரண்டும் சரி 4) அ - தவறு, ஆ-சரி



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

10. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பைத் தேர்க.
அ) மொழிபெயர்ப்பாளர் அ) இந்தியாவின் பெப்பிசு. இ) பிரெஞ்சு ஆளுநரின் தலைமை மொழி பெயர்ப்பாளர் ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை

11. சி சு செல்லப்பா நூல்களில் சாகித்திய அகாதமி விருது பெற்ற புதினம்______
அ) விஷ்ணுபுரம் ஆ) ஜீவனாம்சம் இ) சுதந்திர தாகம் ஈ) கொற்றவை

12. பிழைத் திருத்தத்தில் Dt இக்குறியீடு உணர்த்தும் பொருள்.
அ) ஒற்றை மேற்கோள் குறியீடுகள். ஆ) தடித்த எழுத்தில் மாற்றுக
இ) சொற்களுக்கு இடையே இடைவெளி தருக ஈ) சொல்லையோ எழுத்தையோ நீக்குக

13. பகுபத உறுப்புகளில் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் ______
அ) பகுதி, விகுதி ஆ) பகுதி, இடைநிலை, சாரியை இ) பகுதி, விகுதி, விகாரம்,
ஈ) பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி சாரியை, விகாரம்.

14. உ. வே.சாமிநாதர் பயின்ற கல்வி முறை _________
அ) குருகுலக் கல்வி முறை ஆ) திண்ணைப் பள்ளிக் கல்வி முறை
இ) உயர்நிலைக் கல்வி முறை ஈ) ஐரோப்பியக் கல்வி முறை

## பகுதி - 2

### பிரிவு - 1 செய்யுள் குறுவினாக்கள்

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3×2=6

15. உழுவோர்க்கெல்லாம் விழுமிய வேந்து நீ --- தொடர் உணர்த்தும் பொருள் யாது?
16. இங்கே ஐம்பதாண்டு வேம்பு கோடையில் கொட்டும் பூக்களை எண்ணச் சொல்கிறார்கள். எண்ணச் சொல்கிறவர் யார்? எண்ணுபவர்கள் யாவர் ?
17. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?
18. எப்போது மருந்து தேவை இல்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார்?

### பிரிவு – 2 (உரை நடை) குறுவினாக்கள்

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×2=4

19. கொற்கை, வஞ்சி, தொண்டிவளாகம் --பற்றி குறிப்பு வரைக.
20. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
21. "நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்" என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

### பிரிவு - 3 மொழிப் பயிற்சி

எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. 7×2=14

22. மயங்கொலிச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக. (ஒன்று மட்டும் )
அ) கலை, களை, கழை (அல்லது) ஆ) குரை குறை
23. கலைச்சொல்லாக்கம் தருக. (இரண்டனுக்கும் விடையளிக்க).
அ) பாஸ்போர்ட் ஆ) விசா
24. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) ஏகுமின். (அல்லது) ஆ) மலிந்த
25 மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக
சொந்தக் காலில் நிற்றல் (அல்லது) எதிர்நீச்சல்.
26. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) மண்ணுடை ஆ) திருப்புகழ்



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

27. விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக .

அ) எழுத்து, சொல், __________, யாப்பு, __________.

ஆ) எழுத்து,_______, சீர், தளை,_________, தொடை.

28. மொழி முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?

29. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

அ) குமரனை பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமா என் விட்டிற்கு வருகை தாருங்கள் என் வீட்டிற்கு பக்கத்து வீடு தான் குமரனது வீடு.

30. அடைப்புக்குள் உள்ள ஆக்கப் பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப் பெயர்களைக் கண்டறிக.

அ) வேஷம் போட்டவன் வேடதாரி. பட்டம் வாங்கினவர்? (தாரி) ________

ஆ) வேவுபார்த்திடுவான்: ஓசையின்றிச் சென்றிடுவான். (ஆளி) ________

## பகுதி - III

### பிரிவு -1 செய்யுள் - சிறுவினா.

குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. 2×4=8

31. "சேரநாடு செல்வ வளம் மிக்கது" என்ற கூற்றுக்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

32. "உயர் தமிழை உயிர் என்று போற்றுமின்கள்"---- இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

33. கழுகுமலைத் தலத்தின் சிறப்புகளைக் காவடிச்சிந்து கொண்டு விளக்குக .

34. "கற்றேன் என்பாய் கற்றாயா?"என்று அப்துல் ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார் ?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2×4=8

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தைஎழுதுக.

36. "என்னுயிர் தமிழ் மொழி என்பேன் "என்னும் தலைப்பில் நீவீர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக

37. கல்வியால் நீ அடைந்த சிறப்புகளைப் பத்து வரிகளில் எடுத்துரைக்க .

38. ஜீவாவின் பேச்சு நடை குறித்துச் சுந்தர ராமசாமி கூறுவன யாவை?

### பிரிவு - 3

குறிப்பு எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக. 3×4=12

39. அ) தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு -- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக. (அல்லது)

ஆ) உருவக அணிய்யைச் சான்றுடன் விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக.


பாடலின் மையக்கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் -நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்

கண்கள் இரண்டினில் ஒன்றைக்- குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்.

- பாரதியார்

41. கருத்துப் படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.






www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

42. அ) ஐங்குறுநூற்றுப் பாடல் சுட்டும் திணை, முதல் பொருள், கருப்பொருள்களை அட்டவணைப் படுத்துக. (அல்லது)
செந்துறை பாடாண் பாட்டு -- சான்றுடன் விளக்குக.

43) சான்றோர் சித்திரம்

ஜி.யு.போப் (1820-1908) திருக்குறள் நாலடியார், திருவாசகம் முதலிய தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அரிஸ்டாட்டில்கூடச் சொல்லாத அறவுரைகள் வள்ளுவரால் கூறப்பட்டிருப்பதாக வியக்கிறார் போப். சிறந்த குறள்களை விளக்க வர்ஜில், தாந்தே, வேமன்னா முதலானோரின் கவிதைகளையும் மேற்கோளாகத் தந்திருக்கிறார்.

ஜெர்மனியில் பிறந்து 1814இல் சென்னைக்கு வந்த இரேனியஸ் 1832 இல் தமிழின் முதல் அறிவியல் நூலை, பூமி சாஸ்திரம்' என்னும் பெயரில் வெளியிட்டார். மேலும், பூகோளம், சரித்திரம், இயற்கை, வான சாஸ்திரம், சூரிய மண்டலம், கால நூல், தர்க்கம் முதலான பாட நூல்கள் பலவற்றையும் தமிழில் எழுதி அளித்துள்ளார். தமிழின் முதல் கலைச் சொல்லாக்குநரும் இரேனியசு ஆவார்.

செக் நாட்டவரான கமில் வாச்லவ் சுவெலபில் (1927-2009) தமிழுக்குச் சிறந்த தொண்டாற்றிய மொழியியல் வல்லுநர்களுள் ஒருவர். தமிழ்க் கடவுள்முருகப் பெருமானிடம் கொண்ட ஈடுபாட்டின் காரணமாகத் தான் எழுதிய தமிழ் இலக்கிய வரலாற்று நூலுக்கு 'தி ஸ்மைல் ஆஃப் முருகன்' என்று பெயரிட்டுள்ளார்.

(உரைப்பகுதியைப் படித்து விடை தருக.)

அ) ஜி.யு.போப். ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த நூல்கள் யாவை ?

ஆ) ரேனியஸ் எழுதிய தமிழ் நூல்கள் யாவை ?

இ) தமிழின் முதல் கலைச்சொல் ஆக்குநர் யார் ?

ஈ) "தி ஸ்மைல் ஆப் முருகன்" நூல் எழுதிய அயல்நாட்டு தமிழறிஞர் யார்?

பகுதி - 4 நெடுவினாக்கள்

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3×6=18

44. அ) பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவி என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க .
(அல்லது)
ஆ) வாழ்வின் உயர்வுக்குத் துணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கி கட்டுரையாக்குக .

45. அ) சுற்றுச்சூழலை வளப்படுத்துவது"இயற்கை வேளாண்மையே" என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக .
(அல்லது )
ஆ) தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.

46. அ) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப் பகுதி கொண்டு தொகுத்து எழுதுக.
(அல்லது)
ஆ) ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நண்பன் என்பவன் பிரிக்க முடியாத அங்கமாவான் என்பதை ஜெயகாந்தனின் ஒரே நண்பன் சிறுகதை வழி விளக்குக.

பகுதி - 5

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4+2=6
அ) உடை அணிந்தேன்-- எனத் தொடங்கும் அப்துல் ரகுமானின் தொலைந்து போனவர்கள் பாடலை எழுதுக. (நான்கு வரிகள்)
ஆ) பட்டு - என முடியும் குறள் எழுதுக.



www.freetnbooks.com | FREETNBOOKS